# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213044

1. District / மாவட்டம்: நாமக்கல் | PS / காவல்நிலையம்: ஊ.த.க.பா.பிரிவு நாமக்கல் | Year / ஆண்டு: 2023 | FIR No. / மு.த.அ. எண்: 12/AC/2023 | Date / நாள்: 21/12/2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 18/12/2023
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 17.00 மணிக்கு
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20/12/2023 — Time நேரம் : 16.15 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21/12/2023 Volume-II — Time நேரம் : 10.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வையப்பமலை, நாமக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. செல்வராஜ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. முத்துசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வ-58
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்
   (g) Address : முகவரி கதவு எண். 2/45 பாதரை, பள்ளி பாளையம் அக்ரஹாரம் கிராமம், மோரப்பாளையம் தாலுகா நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. ரஞ்சித், உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO), வையப்பமலை பிரிவு அலுவலகம், நாமக்கல் மாவட்டம்
   2) திரு. முத்துசாமி, உதவிசெயற்பொறியாளர், TANGEDCO, வையப்பமலை, நாமக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   சாதியமல் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது:

ஆதாரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M. சுபாஷினி Rank காவல் துணை கண்காணிப்பாளர் to take up the investigation / Refused Investigation / transferred to PS……………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 21.12.23. | [signature] 21/12/23.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21/12/2023 at 11.30 மணிக்கு

Name: பெயர் M. சுபாஷினி
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
நாமக்கல்

**<u>நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...</u>**

நேற்று 20.12.2023-ஆம் தேதி புதன்கிழமை மாலை 16.15 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, புகார்தாரர் திரு.M.செல்வராஜ், (வயது-58), த/பெ.முத்துசாமி, கதவு எண்.2/45, பாதரை, பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராமம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல், M.செல்வராஜ், த/பெ.முத்துசாமி, கதவு எண்.2/45 பாதரை, பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராமம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல், உயர்திரு. காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, எங்கள் குடும்பத்திற்கு பள்ளிபாளையம் அக்ரஹாரம் பாதரை கிராமத்தில் பூர்வீகமாக பாத்தியப்பட்ட 4 ஏக்கர் நிலம் இருந்தது. எனது குடும்ப பணத்தேவைக்காக அந்த நிலத்தில் சுமார் 1½ ஏக்கர் நிலத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டேன். எங்களது கிணற்றில் உள்ள மின்மோட்டாருக்கு மின்சாரம் செல்லும் இரண்டு மின்கம்பங்கள் நான் விற்ற வீட்டுமனைகளுக்கான ரோடு பகுதியில் செல்கின்றன. என்னிடம் வீட்டுமனை வாங்கியவர்கள் என்னிடம் மனை வாங்கும்போதே ரோட்டில் அமைந்துள்ள மின்கம்பங்களை ரோட்டின் ஓரமாக எனது செலவில் மாற்றி கொடுத்துவிடவேண்டும் என்று தெரிவித்திருந்தனர். ஆகையால் அந்த மின் கம்பங்களை ரோட்டின் ஓரமாக மாற்றி அமைப்பதற்கு வெப்படை மின்சார வாரியத்தில் எனது பெயரில் 'ஆன்லைன் மூலம் கடந்த 15.11.2023-ஆம் தேதி மனு செய்தேன். அந்த மனு எண். 200041511123938 ஆகும். பின்னர் 20.11.2023-ஆம் தேதி காலை வெப்படை மின்சார வாரிய அலுவலகம் சென்று உதவி பொறியாளர் திரு.ரஞ்சித் அவர்களை சந்தித்து எனது மனு குறித்து கேட்டேன். அப்போது அவர் எஸ்டிமேசன் தயார் செய்துவிட்டு தகவல் சொல்வதாக சொன்னார். பின்னர் பலமுறை எனது மனு குறித்து வெப்படை மின்வாரிய அலுவலகம் சென்று கமர்சியல் இன்ஸ்பெக்டர் திரு.அய்யாவு அவர்களையும் உதவி பொறியாளர் (AE) திரு.ரஞ்சித் அவர்களையும் கேட்டேன். அவர்கள் எஸ்டிமேசன் தயார் செய்துவிட்டு சொல்வதாக சொன்னார்கள். கடந்த

11.12.2023-ஆம் தேதி காலை நான் எனது மனு குறித்து பார்க்க வெப்படை மின்வாரிய அலுவலகம் சென்றபோது உதவி பொறியாளர் (AE) தான் மீட்டிங் செல்வதாகவும் மதியம் போன் செய்துவிட்டு வாங்க உதவி செயற் பொறியாளர் அவர்கள் (AD) அலுவலகம் வந்துவிட்டாரா என்று உறுதிபடுத்திக்கொண்டு சொல்கிறேன் அவரை பார்த்து உங்களுடைய எஸ்டிமேசன் உறுதி செய்துவிடலாம் என்று சொன்னார். பின்னர், நான் போன் செய்தபோது அவர் வெளியில் இருப்பதாகவும் நாளை வாங்க என்று சொன்னார். அதன் பின்னர் 12.12.2023-ஆம் தேதி காலை வெப்படை மின்வாரிய அலுவலகம் சென்றேன். அப்போது AE அங்கு இல்லை, அவர் சின்னார்பாளையம் பவர் ஹவுசில் இருப்பதாக சொன்னார்கள். ஆகையால் காலை சுமார் 9.45 மணிக்கு சின்னார்பாளையம் பவர் ஹவுஸ் சென்று AE அவர்களை சந்தித்த போது உதவி செயற்பொறியாளர் (AD) இன்னும் வரவில்லை 11 மணிக்கு போன் பண்ணுங்க நான் உதவி செயற்பொறியாளர் (AD) வந்துள்ளதை உறுதி செய்துகொண்டு சொல்கிறேன். அப்போ வாங்க உதவி செயற் பொறியாளர் (AD) அவர்களை பார்த்துவிடலாம் என்று சொன்னார். பின்னர் நான் 11.05 மணிக்கு AE அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் என்னிடம் உதவி செயற்பொறியாளர் (AD) இன்னும் வரவில்லை என்றும் வெள்ளிகிழமை நீங்க வாங்க என்று சொன்னார். பின்னர் 15.12.2023-ஆம் தேதி வெள்ளிக்கிழமை நான் வெப்படை மின்வாரிய அலுவலகம் சென்ற போது உதவி பொறியாளர் (AE) அலுவலகத்தில் இல்லை, கமர்சியல் இன்ஸ்பெக்டர் திரு.அய்யாவு அவர்களை சந்தித்த போது எனது கோப்பு உதவி செயற்பொறியாளர் (AD) அலுவலகத்திற்கு சென்றுவிட்டதாகவும், AD இடத்தை பார்க்க வருவார், நீங்க AE அவர்களையும் AD அவர்களையும் பார்த்து பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன் பின்னர் நான் 18.12.2023-ஆம் காலை சுமார் 11.15 மணிக்கு வெப்படை மின்வாரிய அலுவலகம் சென்று உதவி பொறியாளர் (AE) அவர்களை சந்தித்தபோது, அவர் என்னிடம் உங்க எஸ்டிமேசன் கோப்பு AD அவர்களிடம்தான் உள்ளது. நான் AD அவர்கள் வந்தவுடன் போன் செய்கிறேன் அப்போது வாங்க நாம் அவரை சென்று பார்த்து பேசிவிடலாம் என்று சொன்னார். பின்னர் மாலை சுமார் 4.45 மணிக்கு உதவி பொறியாளர் (AE) எனக்கு போன் செய்து AD அவர்கள் அலுவலகத்தில் உள்ளதாகவும் என்னை அங்கு வரச்சொன்னார். நான் மாலை சுமார் 05.00 மணிக்கு வெப்படை AD

அலுவலகம் சென்றேன். அப்போது AE அவர்கள் AD அலுவலகத்தின் முன்புறம் நின்று கொண்டிருந்தார். நான் சென்றவுடன் AE திரு.ரஞ்சித் அவர்கள் என்னை அழைத்துக்கொண்டு AD திரு.முத்துசாமி அவர்களை சந்திக்க அவர்களது அறைக்குச் சென்றோம். அப்போது AD அவர்கள் என்னிடம் இப்பொழுது போட்டுள்ள எஸ்டிமேசன் தோராயமாகத்தான் போட்டுள்ளோம். எனக்கு ரூ.50,000/- வரைதான் அதிகாரம் உள்ளது. அதற்குமேல் போனால் EE-க்கு தான் அனுப்ப வேண்டும் என்றும், நீங்க தனியாக ஏதாவது பார்த்து செய்தால் குறைத்து அதற்குள் போடுகிறேன், நானே வேலையை முடித்துக் கொடுக்கிறேன் என்று சொன்னார். மற்ற விபரங்களை AE அவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள், எனக்கு கொடுக்க வேண்டியது எவ்வளவு தொகை என்று AE சொல்வார் என்றும் அவர் சொல்கிற மாதிரி செய்ங்க என்றும் சொன்னார். பின்னர் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்து AE அவர்கள் என்னிடம் உங்க வேலைக்கு 1¼ லட்சம் வரை எஸ்டிமேசன் வரும். ஆனால் நாங்க குறைத்து போட்டுள்ளோம். ஆகையால் ரூ.40,000/- தனியாக எங்களுக்கு கொடுத்திடுங்க என்று சொன்னார். நான் கொஞ்சம் பார்த்து குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு AE அவர்கள் அப்படி குறைச்சுகிட்டா கம்பம் மாற்றி போடும்போது ஆள் கூலி JCB செலவு, வண்டி வாடகை செலவு எல்லாத்தையும் நீங்க பார்த்துக்கனும், மத்தவங்களுக்கு கொடுக்கவேண்டியது மற்றும் ஆபீஸ் செலவு நான் பார்த்துகிறேன் என்றும் இறுதியாக ரூ.35,000/- ரெடிபண்ணிட்டு கூப்பிடுங்க, எங்கிட்ட கொண்டு வந்து கொடுங்க, யார், யார்க்கு எவ்வளவு என்று பிரித்து கூட கொடுத்துவிடுகிறேன், நீங்களே கொண்டுபோய் கொடுத்திடுங்க வேலை முடிந்திடும் என்றும், அதன் பின்னர் உங்களுக்கான எஸ்டிமேசன் எவ்வளவு என்று சொல்லிவிடுகிறோம், ஆன்லைனில் கட்டினா போதும் என்று சொன்னார். நான் பணம் ரெடி பண்ணிட்டு கூப்பிடுவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு எனது DCW பணிக்கு எஸ்டிமேசன் தயார் செய்து ஒப்புதல் வழங்க வெப்படை மின்வாரிய அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.35,000/- கொடுக்க விருப்பமில்லை. ஆகையால் அவர்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- XXXXXX (M.செல்வராஜ்) 20.12.2023.

மேற்கண்ட புகாரினை பெற்று, படித்துப் பார்த்து, புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், எதிரிகள் திரு.ரஞ்சித், உதவிப் பொறியாளர், (இயக்கமும் பராமரிப்பும்), தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வெப்படை பிரிவு அலுவலகம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திரு.முத்துசாமி, உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வெப்படை, நாமக்கல் மாவட்டம் ஆகியோர்களுக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதும் உள்ளதா என்பது குறித்தும், எதிரிகளின் முன் நடவடிக்கை குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் முன் நடத்தை திருப்தியாக இல்லையென்பதும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 21.12.2023-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

21/12/23.

(M. சுபாஷிணி)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.